**DEPOSITION OF WITNESS**

**IN THE COURT OF DISTRICT MUNSIF-CUM-JUDICIAL MAGISTRATE, KODUMUDI.**
**Calendar Case No. 1/2023**
**Prosecution Witness**:1

| | | | |
|---|---|---|---|
| Name | பார்வதி(PW1) | Taluk | |
| Father's Name | | Calling | |
| Village | | Age | |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 18th **day of September 2025** by V.Nivedha Assistant, DM Cum JM Court, Kodumudi by following the direction of Officer of this Court.

***(Accused present.)***

**முதல் விசாரணை(அரசு தரப்பு):-**

நான் தற்போது நாமக்கல் மாவட்டம், பரமத்தி வேலூர், கூடுதுறை ஓலப்பாளையத்தில் குடியிருந்து வருகிறேன். சுமார் 4 வருடங்களுக்கு முன்பு அம்மன் கோவிலில் உள்ள எனது மகள் வீட்டிற்கு எனது கணவருடன் TVS XL இருசக்கர வாகனத்தில் வெங்கமேடு அருகே வந்துகொண்டிருந்தபோது, பெட்ரோல் பங்கிலிருந்து ஒரு லாரி ரிவர்ஸில் வந்து எங்களது வண்டியின் மீது மோதிவிட்டது. லாரி மோதியதில் எனது கணவருக்கு தலை மற்றும் நெஞ்சில் பலத்த காயம் ஏற்பட்டது. ஆஜரில் உள்ள எதிரி தான் மேற்படி விபத்தை ஏற்படுத்திய லாரியை ஓட்டியவர் ஆவார். எனக்கு தலை மற்றும் கையில் காயம் ஏற்பட்டது. பெட்ரோல் பங்கில் வேலை பார்த்து கொண்டிருந்த நபர்கள் ஆம்புலன்ஸ்க்கு தகவல் தெரிவித்தனர். பின்பு எனது கணவரை கரூர் செந்தில் மருத்துவமனைக்கு அழைத்து சென்றோம்.

2. மேல் சிகிச்சைக்காக எனது கணவரை கோவை ராயல்கேர் மருத்துவமனையில் சேர்த்தோம். அப்போது கொடுமுடி போலீசார் மருத்துவமனைக்கு வந்து எனது கணவர் சுயநினைவில் இல்லாததால் என்னிடம்புகார் பெற்றனர். என்னிடம் காண்பிக்கப்படும் புகாரில் உள்ள கையொப்பம் என்னுடையதுதான். புகார் அரசு தரப்பு சான்று ஆவணமாக குறியீடு செய்ய கோரப்பட்டது. **(புகார் அ.த.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது.)** நான்கு நாட்கள் சிகிச்சைக்கு பிறகு சேலம் அரசு மருத்துவனைக்கு அனுப்பிவைத்தார்கள். அங்கு 5 நாட்கள் சிகிச்சை அளித்தும், சிகிச்சை பலனின்றி எனது கணவர் இறந்துவிட்டார்.

PANDIARAJAN Digitally signed by PANDIARAJAN Date: 2025.09.18 09:48:29 +0530

கொடுமுடி போலீசார் சேலம் அரசு மருத்துவமனைக்கு வந்து எனது கணவரின் பிரேதத்தின் மீது விசாரணை நடத்தினர். எனது கணவரை நான் அடையாளம் காட்டினேன். போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**குறுக்கு விசாரணை (எதிரி தரப்பு) :-**

நானும் எனது கணவரும் வண்டியில் செல்லும் போது எனது கணவர் தலைகவசம் அணிந்திருந்தாரா என்றால் அணிந்திருந்தார். தலைகவசம் அணிந்திருந்தால் கீழே விழும்போது தலையில் காயம் ஏற்பட்டிருக்காது என்றால் சரியல்ல. எனது கணவர் வாகனம் ஓட்டும் போது தலைகவசம் அணியவில்லை என்றாலும், வழக்கிற்காக தற்போது பொய்யாக சொல்கிறேன் என்றாலும் சரியல்ல. எனது கணவருக்கு ஓட்டுநர் உரிமம் உள்ளதா என்றால் உள்ளது. ஓட்டுநர் உரிமத்தை போலீசார் விசாரணையில் கொடுத்துள்ளேனா என்றால் கொடுத்துள்ளேன். எனது கணவருக்கு ஓட்டுநர் உரிமமே கிடையாது என்றாலும், நான் வழக்கிற்காக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும் சரியல்ல. நான் முதல் விசாரணையில் கூறியதுபோல் லாரி எதுவும் ரிவர்ஸில் வந்து இடிக்கவில்லை என்றாலும், சாலையின் ஓரமாக நின்று கொண்டிருந்த லாரியின் மீது மோதி விபத்து ஏற்பட்டது என்றாலும் சரியல்ல. எனது கணவர் ஓட்டிய இருசக்கர வாகனம் பிரேக் பிடிக்காததால் லாரியின் மீது மோதி விபத்தை ஏற்படுத்தி கொண்டார் என்றால் சரியல்ல. போலீசார் வெறும் தாளில் கையொப்பம் வாங்கினார்களா என்றால் இல்லை, என்னிடம் விசாரித்து எழுதியதில் தான் நான் கையொப்பம் செய்தேன். அதில் என்ன எழுதியிருந்தது என்ற விவரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியும் நான் படித்து பார்த்தேன்.

2. எனக்கு எங்கு அடிபட்டது என்றால் சாட்சி தனது இடது கையை காண்பித்து காயம் பட்ட தழும்பையும், மற்றும் தனது பின்னந்தலையையும் அடிபட்டதாக காண்பித்தார். எனக்கு வலது கையில் தான் அடிபட்டது என்றால் சரியல்ல. வலது கையில் எனக்கு அடிபட்டதால் என்னால் கையொப்பம் செய்திருக்க இயலாது என்றால் சரியல்ல. மேற்படி புகாரில் வேறு யாரேனும் கையொப்பம் செய்தார்களா என்றால் நான் மட்டும் தான் கையொப்பம் செய்தேன். வாகன இழப்பீடு கோரி வழக்கு தாக்கல் செய்துள்ளேனா என்றால் செய்துள்ளேன். அதிக நஷ்டஈடு பெற வேண்டி ஆஜரில் உள்ள எதிரி மீது பொய்யாக வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. நான் சொன்ன தேதியில், சொன்ன இடத்தில், சொன்ன நேரத்தில் எந்தவிதமான சம்பவமும் நடைபெறவில்லை

PANDIARAJAN Digitally signed by PANDIARAJAN Date: 2025.09.18 09:48:34 +0530

என்றால் சரியல்ல. ஆஜர் எதிரிக்கும் இந்த வழக்கிற்கும் எந்த சம்பந்தமும் இல்லை என்றால் சரியல்ல. எனது கணவரின் கவனகுறைவால் தான் இந்த விபத்து ஏற்பட்டது என்றால் சரியல்ல. காவல்துறையால் ஜோடிக்கப்பட்ட வழக்கிற்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை:- இல்லை**

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்லச் சொல்ல, என்னால் தட்டச்சருக்குச் சொல்லப்பட்டு, அவரால் திறந்த நீதிமன்றத்தில் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சிக்கு படித்துக் காண்பிக்கப்பட்டு, சாட்சியால் சரி என்று ஒப்புக் கொள்ளப்பட்டு என் முன்னால் சாட்சியின் கையெழுத்து / கைரேகை பெறப்பட்டது.

PANDIARAJAN

Digitally signed by PANDIARAJAN
Date: 2025.09.18 09:48:38 +0530

மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல்
நீதித்துறை நடுவர், கொடுமுடி.

**DEPOSITION OF WITNESS**

**IN THE COURT OF DISTRICT MUNSIF-CUM-JUDICIAL MAGISTRATE, KODUMUDI.**
**Calendar Case No. 1/2023**
**Prosecution Witness**:2

| Name | கவின்குமார் (PW2) | Taluk | |
|---|---|---|---|
| Father's Name | | Calling | |
| Village | | Age | |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 18th **day of September 2025** by V.Nivedha Assistant, DM Cum JM Court, Kodumudi by following the direction of Officer of this Court.

***(Accused present.)***

**முதல் விசாரணை(அரசு தரப்பு):-**

நான் தற்போது சிவகிரி, அம்மன்கோவிலில் குடியிருந்து கொண்டு பேக்கரியில் வேலை செய்து வருகிறேன். விபத்தில் இறந்த செல்வராஜ் எனது அப்பா ஆவார். அ.சா.1 பார்வதி எனது அம்மா ஆவார். சுமார் 3,4 வருடங்களுக்கு முன்பு நான் அம்மன்கோவிலில் உள்ள பேக்கரியில் டீ போட்டுக்கொண்டிருந்தேன். பெட்ரோல் பங்கில் வேலை பார்த்துகொண்டிருந்த ஒருவர் எனக்கு போன் மூலமாக எனது அப்பாவும், அம்மாவும்சென்ற இருசக்கர வாகனம் விபத்தில் சிக்கியதாக தகவல் கூறினார். நானும் எனது அக்கா வீட்டுக்காரரர் செந்தில் என்பவரும் கரூர் செந்தில் மருத்துவமனைக்கு சென்று பார்த்தோம். நாங்கள் சென்று பார்த்தபோது எனது அப்பாவிற்கு பலத்த காயம் ஏற்பட்டு சிகிச்சையில் இருந்தார். எனது அம்மாவிற்கு கையில் சிராய்ப்பு காயமும், தலையிலும்அடிபட்டிருந்தது. பிறகு மேல்சிகிச்சைக்காக எனது அப்பாவை கோவை ராயல்கேர் மருத்துவமனைக்கு கொண்டு சேர்த்தோம்.

2. 3 நாட்கள் சிகிச்சைக்கு பிறகு எவ்வித முன்னேற்றமும் இல்லாததால் சேலம் அரசு மருத்துவமனையில் கொண்டு சேர்த்தோம். அங்கு 3 நாட்கள் சிகிச்சை அளித்தும் சிகிச்சை பலனின்றி இறந்துவிட்டார். பின்னர் கொடுமுடி போலீசார் சேலம்அரசு மருத்துவமனைக்கு வந்து எனது தந்தையின் பிரேதத்தின் மீது விசாரணை நடத்தினர். போலீசார் என்னை விசாரித்தார்கள்.

PANDIARAJAN
Digitally signed by PANDIARAJAN
Date: 2025.09.18 09:48:43 +0530

**குறுக்கு விசாரணை (எதிரி தரப்பு) :-**

சம்பவத்தை பற்றி எனக்கு நேரடியாக எதுவும் தெரியாது என்றால் சரிதான். எனது அம்மா கொடுத்த புகாரில் நான் கையொப்பம் செய்தேனா என்றால் கையெழுத்துபோட்டேன் ஆனால் அது புகாரிலா என்று தெரியாது. நான் கையொப்பம் செய்த தாளில் என்ன எழுதியிருந்தது என்று எனக்கு தெரியாது என்றால் சரிதான். வாகன இழப்பீடு கோரி வழக்கு தாக்கல் செய்துள்ளேனா என்றால் செய்துள்ளேன். அதிக நஷ்டஈடு பெற வேண்டி ஆஜரில் உள்ள எதிரி மீது பொய்யாக வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. நான் சொன்ன தேதியில், சொன்ன இடத்தில், சொன்ன நேரத்தில் எந்தவிதமான சம்பவமும் நடைபெறவில்லை என்றால் சரியல்ல. ஆஜர் எதிரிக்கும் இந்த வழக்கிற்கும் எந்த சம்பந்தமும் இல்லை என்றால் சரியல்ல. எனது அப்பாவின் கவனகுறைவால் தான் இந்த விபத்து ஏற்பட்டது என்றால் சரியல்ல. காவல்துறையால் ஜோடிக்கப்பட்ட வழக்கிற்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை:- இல்லை**

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்லச் சொல்ல, என்னால் தட்டச்சருக்குச் சொல்லப்பட்டு, அவரால் திறந்த நீதிமன்றத்தில் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சிக்கு படித்துக் காண்பிக்கப்பட்டு, சாட்சியால் சரி என்று ஒப்புக் கொள்ளப்பட்டு என் முன்னால் சாட்சியின் கையெழுத்து / கைரேகை பெறப்பட்டது.

PANDIARAJAN

Digitally signed by PANDIARAJAN
Date: 2025.09.18 09:48:47 +0530

மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல்
நீதித்துறை நடுவர், கொடுமுடி.